பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஐப்பசி 06 வியாழக்கிழமை (22-10-1992) UTHAYAN – A Lively National Tamil Daily கதிர் 329

## பருத்தித்துறைக் கடலில் மீனவர்கள்மீது தாக்குதல்

பருத்தித்துறை கடற்பிராந்தியத்தில் நேற்று ஐந்து மீனவர்கள் ஸ்ரீலங்கா கடற்படையினரின் தாக்குதலுக்கு உள்ளானார்கள்.

கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த இந்த மீனவர்களை நோக்கி கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்றும் மீன் பிடிப் படகுகளைத் துரத்திப் பிடித்து மீனவர்களைத் தாக்கினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இவர்களது மீன் பிடி உபகரணங்களும் சேதமாக்கப்பட்டன.

இனி மீன் பிடிக்கக் கூடாது என்று எச்சரித்த கடற்படையினர் மீனவர்களை துரத்தி விட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-165)

## உடுப்பிட்டி-வல்லையில் நேற்று பொம்மர்கள் குண்டு வீச்சு!

யாழ்ப்பாணம், அக். 22

உடுப்பிட்டிச் சந்தியிலும் வல்வெட்டித்துறைச் சந்திக்கு அருகாமையிலும் ஸ்ரீலங்கா விமானப் படையின் 3 குண்டு வீச்சு விமானங்கள் நேற்றுக் காலை நடத்திய தாக்குதல்களில் இருவர் காயமடைந்தனர். பல கட்டடங்கள் சேதமடைந்தன.

நேற்றுக் காலை 10 30 மணியளவில் இச் சம்பவம் இடம் பெற்றது.

உடுப்பிட்டிச் சந்தியில் இடம்பெற்ற தாக்குதலில் இரு கடைகளும் குடியிருப்புகளும் சேதமடைந்தன. இக் குண்டு வீச்சிலேயே இருவர் காயமடைந்தனர். இரண்டு குண்டுகள் இங்கு வீசப்பட்டன.

கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த வைத்திலிங்கம்

[2 ஆம் பக்கம் பார்க்க]

# எல்லைக் கிராம பாதுகாப்புக்கு போதிய படையினர் இல்லை

## எனினும் புதிய திட்டம் தயாராகிறது என்கிறார் பிரதமர் விஜேதுங்கா

கொழும்பு, அக். 22

வடக்கு - கிழக்கின் எல்லைக் கிராமங்களை ஒரே இடத்தில் நிலை கொண்டு நின்று பாதுகாக்கும் அளவுக்கு போதிய படையினர் எம்மிடம் இல்லை.

எனினும் பொலன்னறுவ சம்பவத்தின் பின்னர் எல்லைக் கிராமங்களின் பாதுகாப்பைப் பலப்படுத்த புதிய திட்டங்கள் தயாராகி வருகிறது.

இவ்வாறு பிரதமரும், பாதுகாப்புத் துணை அமைச்சருமான டி. பி. விஜேதுங்கா நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு மாகாண எல்லைக் கிராமங்களில் வாழும் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு பாதுகாப்புத் துணை அமைச்சர் என்ன செய்யப் போகிறார்? — என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனாப் அஷ்ரப் கேள்வி ஒன்றை எழுப்

[5 ஆம் பக்கம் பார்க்க]

## மட்டக்களப்பில் 20 தமிழர்கள் கைது

மட்டக்களப்பு, அக். 22

மட்டக்களப்பைச் சேர்ந்த இருபது தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மட்டக்களப்பு வடக்கு உதவிப் பொலீஸ் அதிபரின் உத்தரவின் இவர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரிலேயே கைது கைது செய்யப்பட்டுத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

கைது செய்யப்பட்டுத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளோர் விபரம் வருமாறு:-

கின்னத்தம்பி பரமநாதன் [மகிழவெட்டுவான்], கந்தவேல் சசீந்திரகுமார் [மகிழ வெட்டுவான்], யோகரத்தினம் செல்வராஜா [மகிழ வெட்டுவான்], சிவலிங்கம் பகீரதன் [திமிலதீவு], காளி யோகேந்திரன் [5 ஆம் பிரிவு, ஏறாவூர்], கந்தையா கிஷ்ண பிள்ளை [மன்னம்பிட்டியா], பொடியன் சங்கரலிங்கம் [1 ஆம் பிரிவு பழுகாமம்].

இளையதம்பி பொன்னுத்துரை [மாவடி வேம்பு, சித்தாண்டி], செல்லம் கணபதிப் பிள்ளை [காளிகோவிலடி, சித்தாண்டி], சீனித்தம்பி

[6 ஆம் பக்கம் பார்க்க]

## கொழும்பில் 40 பேர்

கொழும்பு, அக். 22

சிரேஷ்ட பொலீஸ் அதிபர் தியோபிளஸ் கடந்த மாதம் கொழும்பில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து நடத்தப்பட்ட விசாரணைகளை அடுத்து கொழும்பு மாநகரின் பல பகுதிகளிலும் வைத்து 40 பேர் துப்பறியும் நிபுணர்களால் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்கள் அகதிகள் என்ற போர்வையில் கொழும்புக்கு வந்து தங்கியிருந்தார்கள் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

கொழும்பில் தனது நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான கட்டமைப்பு ஒன்றை மீண்டும் அமைப்பதற்கு விடுதலைப் புலிகள் எடுத்துக் கொண்ட முயற்சிகளை பொலீஸார் முறியடித்துள்ளனர் என்று இலங்கை வானொலி நேற்றுத் தெரிவித்தது. [இ-எ-10]

## தபால்கள் இன்று விநியோகம்

யாழ்ப்பாணம், அக். 22

குமண கப்பலில் வந்த 423 தபால் பொதிகளும் நேற்று மாலை யாழ். பிரதம தபாலகத்திற்கு எடுத்து வரப்பட்டன.

இவற்றில் யாழ். நகரப் பகுதிக்கான தபால்கள் இன்று தரம் பிரிக்கப்பட்டு விநியோகிக்கப்படவுள்ளன.

பிற இடங்களுக்கான தபால் பொதிகளும் இன்று முதல் அனுப்பி வைக்கப்படுமென யாழ். பிரதம தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-165:17-162)

## ஷெல் தாக்குதல்

வளலாய் முகாமில் இருந்து தொண்டமானாறு, இடைக்காடு பகுதிகளை நோக்கியும், காரைநகரில் இருந்து மூளாய், பொன்னாலை பகுதிகளை நோக்கியும் செவ்வாய் இரவு ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

அதேசமயம் மண்டைதீவு இராணுவ முகாமில் இருந்தும் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

(இ-15-99-165)

## விடுதலைப் புலிகள் இயக்கம் மொஸாட்டின் முகவர் அல்ல

### அரச தரப்பில் சபையில் மறுப்பு

கொழும்பு, அக். 22

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், இஸ்ரேலிய "மொஸாட்" உளவுப்படையின் முகவர் என்ற குற்றச்சாட்டை அரசாங்கம் மறுத்துள்ளது.

விடுதலைப் புலிகள், "மொஸாட்" அமைப்பின் முகவர் என்பதற்கான எந்த வித ஆதாரமும் இல்லை என்று பிரதமரும் பாதுகாப்புத் துணை அமைச்சருமான திரு. டி. பி. விஜயதுங்கா நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நேற்று நாடாளுமன்றத்தில், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனாப் எம். எச். எம். அஷ்ரப், பொலன்னறு வைப் படுகொலைகள் குறித்து பேசினார். அப்போது விடுதலைப் புலிகள் இயக்கம், இஸ்ரேலிய "மொஸாட்டின்" முகவர் என்று குற்றஞ்சாட்டினார்.

அவர் பேசுகையில் கூறியதாவது:

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மூன்று இராணுவ முகாம்கள் மட்டக்களப்பில் மூடப்பட்டன

கொழும்பு, அக். 22

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரை, உன்னிச்சை, மாங்கேணி ஆகிய இடங்களில் இருந்த 3 ஸ்ரீலங்கா இராணுவ முகாம்கள் மூடப்பட்டுள்ளன.

வாகரை, மாங்கேணி ஆகிய பகுதிகளில் இயங்கிவந்த இரு இராணுவ முகாம்களும் வாழைச்சேனைக்கும் திருகோணமலைக்கும் இடையே புல்லாவெளிப் பிரதேசத்தில் இயங்கிவந்தன. உன்னிச்சை இராணுவ முகாம் மட்டக்களப்புக்கு மேற்கே படுவான் கரைக்கு அப்பால் இயங்கி வந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இவ்வருடத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மீது அடிக்கடி நடத்திவந்த தாக்குதல்களால் பெரும் எண்ணிக்கையிலான இராணுவத்தினர் கொல்லப்பட்டாலும்—

(2 ஆம் பக்கம் பார்க்க)

சுத்தக்காற்று சுற்றிலும் நிலவிட
நித்தம் ஒரு மரம் நடுவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றம்

## காலாண்டு மக்கள் சஞ்சிகை வெளியீட்டு விழா

தலைவர்: கலாநிதி சுரைசுந்தரம்பிள்ளை
இடம்: கம்பன்கோட்டம், நல்லூர்
காலம்: 24-10-1992 (நாளை மறுதினம்) சனி மாலை 3.00 மணிக்கு

"அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்"

வெளியீடு:
தமிழ்த்தாய் மன்றம்

(C/3616)

---

ஸ்ரீ மூத்த நயினார் கோவில்
ஆனைக்கோட்டை

# தேவை

நித்திய நைமித்திய பூஜைகள், மகோற்சவங்கள் செய்யத்தகுதி படைத்த குருக்கள் ஒருவரும், உதவி யாக மண்டப சேவை மடைப்பள்ளி வேலை, ஆகியன தெரிந்த உதவிக் குருக்களும் தேவை. குருக்களே தனக்கு ஏற்ற உதவிக் குருக்களையும் தெரிந்து விண்ணப்பித்தல் விரும்பத்தக்கது; கோவில் அனுபவமிக்க 40 வயதிற்கு மேற்பட்ட கணக்கப் பிள்ளையும், கோவில் சம்பந்தப்பட்ட பல வேலைகளும் தெரிந்த ஒருவரும் தேவை; நற்சான்றிதழுடன் 31 - 10 - 1992 க்கு முன் எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும்.

இணை முகாமையாளர்.

[22979]

---

# அரசாங்க அறிவித்தல்

20-10 92இல் பரிசாரகர் பயிற்சியை முடித்த சுகாதார தொண்டர் ஊழியர்களிற்கு பின்வரும் திகதிகளில் தாதிகள் பயிற்சிப் பாடசாலையில் பரீட்சை நடைபெறும். சம்பந்தப்பட்டவர்கள் பரீட்சைக்கு சமூகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

25-10-92 காலை 8.00 மணி — எழுத்துப் பரீட்சை
26-10-92 }
27-10-92 } — செய்முறைப் பரீட்சை

வைத்தியகலாநிதி பொ. இரத்தினசபாபதி
சு. சே. பிராந்தியப் பணிப்பாளர்

சுகாதார சேவைகள்
பிராந்திய பணிப்பாளர் பணிமனை,
யாழ்ப்பாணம்.

(C/3615)

---

# மனைப்பொருளியல், சித்திர கண்காட்சி

இடம்: யா/கோப்பாய் அரசினர் ஆசிரியர் கலாசாலை
காலம்: 22-10-92 — 23-10-92
நேரம்: காலை 9.00 — 4 00

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் மனைப் பொருளியல், சித்திரம் ஆகிய நெறியினரால் நடத்தப் படும் கண்காட்சிக்கு அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

[★ பிரவேசம் இலவசம்]

அதிபர், விரிவுரையாளர்
பயிற்சி ஆசிரியர்கள்

(22982)

---

# தசாக அறிவித்தல்

## திருமதி சுப்புலஷ்மி இராமச்சந்திரன்

09 - 10 - 1992 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த திருமதி சுப்புலஷ்மி இராமச்சந்திரன் (சாந்தா) அவர்களின் அபரக்கிரியைகள் கீழ்க்கண்ட திகதிகளில் நடைபெற்றன என்பதை அறியத்தருகின்றோம்.

| | | |
|---|---|---|
| 18-10-92 | ஞாயிற்றுக்கிழமை | தசாகம் |
| 19-10-92 | திங்கட்கிழமை | ஏகோதிஷ்டம் |
| 20-10-92 | செவ்வாய்க்கிழமை | சபிண்டீகரணம் |
| 21-10-92 | புதன்கிழமை | கிருசயக்யம் |

தகவல்:
S. இராமச்சந்திரசர்மா
107, கடற்கரை வீதி,
நீர்கொழும்பு.

கு. மணிக்குருக்கள்
கைலாசபிள்ளையார் கோவில்,
நல்லூர்.

(22981)

---

# வாணிபம், தொழில் முயற்சி பதிவுத் திகதிகள்

வாணிபம் மற்றும் உயர் தொழில் முயற்சிகளைப் பதிவு செய்து கொள்வதற்கான கால அட்டவணைகளை உதவி அரச அதிபர் பிரிவு ரீதியாக தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறை வெளியிட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு:-

| வாணிபம்/தொழில் தன்மை | சங்கானை | தெல்லிப்பழை | உடுவில் |
|---|---|---|---|
| ★ தவுண், பொன், வெள்ளி நகை வாணிபம், நகை உற்பத்தித் தொழில், அடைவு கடை; ★ பலசரக்கு வாணிபம் ★ புடைவை வாணிபம் ★ கட்டடப் பொருள்கள்/ மின்சார உபகரணங்கள்/ மோட்டார் உதிரிப்பாக வாணிபம் | 23-10-1992 முதல் 26-10-1992 வரை | 31-10-1992 முதல் 03-11-1992 வரை | 04-11-1992 முதல் 07-11-1992 வரை |
| ★ விடுதிகள் / மதுபான சாலை தேநீர்ச்சாலை ★ தொழில் நிறுவனங்கள் ★ உயர்தொழில்/கண்ணியத் தொழில் ★ ஏனையவை | 27-10-1992 முதல் 30-10-1992 வரை | 31-10-1992 முதல் 03-11-1992 வரை | 08-11-1992 முதல் 11-11-1992 வரை |

ஏனைய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கான கால அட்டவணை பின்னர் அறிவிக்கப்படும்.

---

## கருத்தரங்கு

திருநெல்வேலியில் இயங்கும் பலாலி ஆசிரிய கலாசாலையில் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு "சில பொதுவான நோய்களும் அவற்றுக்கான தடுப்பு முறைகளும்" என்ற தலைப்பிலான கருத்தரங்கு நடைபெறும்.

பலாலி ஆசிரிய கலாசாலை விஞ்ஞான மன்றத்தின் ஆதரவில் நடைபெறும் இக்கருத்தரங்கில் வைத்திய கலாநிதி எம். கே. முருகானந்தம் கருத்துரை வழங்குவார். (இ)

## பரிசளிப்பு விழா

கொக்குவில் இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று காலை 9.30 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறுகிறது. யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்; திருமதி தேவராணி சுந்தரலிங்கம் பரிசில்களை வழங்குவார். (அ)

---

# ஏல விற்பனை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மண்ணெண்ணெய் வெற்றுப் பீப்பாக்கள் 26-10-92 திங்கட்கிழமை காலை 10 மணிக்கு பல்கலைக்கழக களஞ்சியச் சாலைக்கு அருகாமையில் வைத்து ஏலத்தில் விற்கப்படும்.

ஏலத்தில் வெற்றி பெறுபவர் உரிய முழுத் தொகையையும் உடனடியாக பல்கலைக்கழக காசாளரிடம் செலுத்தி பீப்பாக்கள் முழுவதையும் அன்று பிற்பகல் 4 மணிக்கு முன்னதாக பல்கலைக்கழகத்தில் இருந்து அப்புறப்படுத்தல் வேண்டும்.

- பதிவாளர்.

யாழ்ப்பாணப்-பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.
1992-10-20.

(சி-3612)

---

# யாழ். ஆஸ்பத்திரி படுகொலை: 5 ஆவது நினைவு தினம் நேற்று

இந்திய அமைதிப் படையினரால் கடமை நேரத்தில் படுகொலை செய்யப்பட்ட டாக்டர்கள், தாதியர்கள் சிற்றூழியர்கள் உட்பட 21பேரின் 5 ஆவது நினைவு அஞ்சலி வைபவம் நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் இடம்பெற்றது.

இவர்கள் படுகொலை செய்யப்பட்ட ஆஸ்பத்திரிக் காரியாலயத்துக்கு முன் இவர்களின் உருவப்படங்கள் வைக்கப்பட்டிருந்தன.

உருவப்படங்களுக்கு சத்திர சிகிச்சை நிபுணர் எஸ். பொன்னம்பலம் ஈகைச் சுடரேற்ற சிற்றூழியர்கள் மலர் மாலை அணிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து அனைத்து ஊழியர்களும் இறந்தோரின் உறவினர்களும் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

21 தீபங்களால் படங்கள் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

2 நிமிட மௌன அஞ்சலியைத் தொடர்ந்து அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது.

அஞ்சலிக் கூட்டத்தை அடுத்து ஆஸ்பத்திரியிலுள்ள இந்து கிறிஸ்தவ ஆலயங்களில் அவர்களின் ஆத்மா சாந்திக்காக விசேட பூசைகள், ஆராதனைகள் இடம்பெற்றன.

## விவாத அரங்கில் வெற்றி

"கூட்டுக் கல்வியே நாட்டுக்கு உகந்தது" என்னும் பொருளில் உடுவில் மகளிர் கல்லூரிக்கும் யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையில் கடந்த திங்கட்கிழமை விவாத அரங்கு ஒன்று இடம்பெற்றது.

"கூட்டுக் கல்வி உகந்தது அல்ல" என்று பேசிய உடுவில் மகளிர் கல்லூரியினர் வெற்றி பெற்றனர். (ஒ)

---

## உடுப்பிட்டி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

துரைச்சாமி (வயது 43) அதே இடத்தைச் சேர்ந்த சோமசுந்தரம் ஞானசுந்தரம் (வயது 36) ஆகியோரே காயம் அடைந்தவர்கள் ஆவர்.

பொம்மர்கள் தாக்குதல் நடத்திய சமயம் பொம்மர்களுக்கு உதவியாக ஹெலிக்கொப்டர் ஒன்றும் வானத்தில் வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

வல்வெட்டித்துறைச் சந்திக்கு அருகாமையில் இடம்பெற்ற குண்டு வீச்சின் போது குடியிருப்புகள் பல சேதமடைந்தன. (இ-165 15-10)

---

## மூன்று இராணுவ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

போர் நடவடிக்கைகளில் பயன்படுத்த முடியாத அளவுக்குப் படையினர் காயமடைந்ததாலும்—

ஆயிரக்கணக்கில் சிப்பாய்கள் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களுக்கு அஞ்சி இராணுவத்திலிருந்து தப்பி ஓடியதாலும்—

ஸ்ரீலங்காப் படையினருக்குப் பெரும் ஆளணி வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

மேலும் புதிதாக ஸ்ரீலங்கா இராணுவத்துக்கு ஆட்சேர்ப்பு நடத்தும் அரசின் திட்டம் சிங்கள இளைஞர் படையில் சேர முன்வராத காரணத்தால் தோல்வி அடைந்துள்ளது.

இந்த நிலையில், தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதல்களும் வெற்றிகரமாக அடிக்கடி நடத்தப்பட்டு வருவதால் தென்தமிழீழத்தில் இராணுவத்தின் நேரடி நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

---

## தொழில் நுட்பக் கல்லூரி - யாழ்ப்பாணம்
## 1993ஆம் கல்வியாண்டிற்கான
# மாணவர் அனுமதி

எமது கல்லூரியின் 1993 ஆம் கல்வியாண்டு பயிற்சி நெறிகளுக்கு மாணவர் அனுமதிக்கான விண்ணப்பப் படிவங்கள் 21 - 11 - 1992 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும் என அறியத்தருகிறேன்.

அதிபர்.

தொழில் நுட்பக் கல்லூரி,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
1992 - 10 - 21

(சி-3611)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபரை கைது செய்ய கோரி மாணவர்கள் பகிஷ்கரிப்பு

கொழும்பு, அக். 22

எம்பிலிப்பிட்டி மத்திய கல்லூரியைச் சேர்ந்த — குறைந்தது 18 மாணவர்கள் காணாமற்போன சம்பவம் தொடர்பாக — கல்லூரியின் அதிபரைக் கைது செய்ய வேண்டும் என்று கோரி சக மாணவர்கள் கடந்த வாரம் வகுப்புகளைப் பகிஷ்கரித்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

தென்பகுதியில் தீவிரவாதச் செயல்கள் உச்சக் கட்டத்தில் இருந்தபோது, இம்மாணவர்கள் காணாமற்போனார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மாணவர்கள் பகிஷ்கரிப்பு போன்ற ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடக்கூடாது என்று ஆலோசனை கூறிய பொலிஸார், கல்லூரி அதிபருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கள் விரும்பினால் சட்டரீதியான முறையில் அம்முயற்சிகளில் ஈடுபட வேண்டும் என்றும் யோசனை தெரிவித்தனராம்; (ஒ-எ)


## பேராதனை பல்கலைக்கழகத்துக்கான

## வெளிவாரிப் பட்டப்படிப்புகள்

## G. A. Q. - 93 / 94

விரிவுரைகள் ஆரம்பம்: 24 - 10 - 1992

8-00 மணி

பல்கலைக்கழகத்துக்கான சகல பதிவுகளும் எமது நிறுவனத்தினால் செய்து தரப்படும்.

★ விபரங்களை நேரில் பெற்றுக் கொள்ளவும்;

எஸ். அருள்நங்கை (நிர்வாகி).

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(இ-3715)



## சித்ராலயா யாழ்நகரில்

★ போட்டோஸ்ரற் பிரதிகள்
Photostat Copies

★ பாஸ்போர்ட் படங்கள்
Passport Photographs

★ தேசிய அடையாள அட்டைப் படங்கள் (அரச அங்கீகாரம் பெற்றவர்கள்)
National Identitity Card Photographers (Government Approved)

★ கறுப்பு வெள்ளைப் புகைப்படங்கள் வேண்டிய அளவுகளில் பெரிதாக்கல்
Black and White Photographs Enlargements

★ கலர்ப் புகைப்படங்கள் (மங்கள வைபவங்கள் உட்பட)
Colour photographs (Indoor and outdoor)

போன்ற உங்கள் தேவைகளுக்கு என்றும்

## சித்ராலயா

172, ஸ்ரான்லி வீதி (அருச்சுனா வீதி),
யாழ்ப்பாணம். (சி/3594)


## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 07 — 06 — 1987



உதிர்வு 22 — 10 — 1990

### ச. அட்சயன்

நீங்கா நினைவுகளுடன் வாழும்:
அப்பா, அம்மா,
அண்ணா, தம்பி, உறவினர்கள்.

ந. சத்தியநாதன்,
கைதடி மேற்கு, கைதடி. (22963)

# புற்றுநோயைக் கண்டுபிடிக்கும் ஆய்வு நிலையம் யாழ். நகரில்

## அடுத்த மாதம் முதல் இயங்கும்

யாழ்ப்பாணம், அக். 22

புற்றுநோயை ஆரம்பத்திலேயே கண்டுபிடிக்கும் ஆய்வு நிலையம் ஒன்று அடுத்த மாதம் முதல் யாழ். நகரில் செயற்படவிருக்கிறது.

யாழ். புற்றுநோய்த் தடுப்புச் சங்கத்தின் ஏற்பாட்டில், பிரதான வீதியில் அமைந்துள்ள சங்கத்தின் கட்டடத்தில் இந்த ஆய்வு நிலையம் இயங்கும்.

வாய்ப் புற்றுநோய் கூடுதலாக பரவி வருவதால், ஆரம்ப கட்டத்தில் அந்நோயைக் கண்டுபிடிக்க வசதியாக பல் வைத்திய நிபுணர் ஒருவர் அந்நிலையத்தில் பணி புரிவார்.

அத்துடன் பெண்களுக்கு மார்பில் ஏற்படும் புற்றுநோயைக் கண்டுபிடிக்கும் பணியும் இந்நிலையத்தில் மேற்கொள்ளப்பட இருக்கிறது.

புற்றுநோயை ஆரம்ப கட்டத்தில் கண்டுபிடித்து, சம்பந்தப்பட்டவர்களுக்கு வைத்திய ஆலோசனை வழங்கப்படும் என புற்றுநோய்த் தடுப்பு சங்கத் தலைவர் டாக்டர் இ. தெய்வேந்திரன் உதயனுக்குத் தெரிவித்தார். (ஒ-3)

## சுதந்திரக்கட்சி எம்.பி. மறுக்கிறார்

கொழும்பு, அக். 22

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தேசிய பட்டியல் எம்.பியான திரு. ரீ. டபிள்யூ. இராஜரத்தினம் தாம் பதவி விலகும் முடிவு எதனையும் எடுக்கவில்லை என்று தெரிவித்துள்ளார்.

திரு. இராஜரத்தினம் சுகயீனம் காரணமாகப் பதவி விலகப் போவதாகச் செய்தி வெளியாகியது பற்றி அவரிடம் கேட்கப்பட்டபோதே அவர் இப்படித் தெரிவித்தார்.

தாம் சிறிது சுகயீனமுற்றிருந்தது உண்மைதான் என்றும் ஆனால் பதவி விலகுவதாக முடிவு எடுக்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார். (ஒ-10)

## சந்திரிகா நியமனத்துக்கு ஆட்சேபம்

கொழும்பு, அக். 22

கம்பஹா மாவட்ட சுதந்திரக்கட்சி அமைப்பாளராக திருமதி சந்திரிகா குமாரணதுங்க நியமிக்கப்பட்டதற்கு அந்த மாவட்ட சுதந்திரக் கட்சிக் கிளையும், கட்சிப் பிக்குகளும், கட்சியின் உள்ளூர் அமைப்பாளர்களும் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர்.

இந்த நியமனத்தை உடனடியாக ரத்துச் செய்யும்படி கட்சித் தலைவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவை அவர்கள் கோரியுள்ளனர். (ஒ-எ)

## தமிழ் பொலீஸ் சார்ஜன்ட் சுட்டுக் கொல்லப்பட்டார்

வவுனியாப் பொலிஸைச் சேர்ந்த சார்ஜன்ட் சுப்பிரமணியம் இந்திரகுமார் என்பவர் கடந்த திங்கட்கிழமை மட்டக்களப்பு பெரிய போரதீவில் வைத்து ஆயுதபாணிகள் சிலரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கடந்த வாரம் விடுமுறையில் தனது சொந்த ஊரான பழுகாமத்திற்கு சென்றிருந்த சமயம் அவர் சுட்டுக்கொல்லப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-த)

## முஸ்லிம் காங்கிரஸ் விடுத்த ஹர்த்தால் அழைப்புக்கு சுதந்திரக்கட்சி எதிர்ப்பு

கொழும்பு, அக். 22

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவர் எம். எச்.எம் அஷ்ரப் பொலன்னறுவைச் சம்பவம் தொடர்பாக நாளை வெள்ளிக்கிழமை ஹர்த்தாலுக்கு விடுத்திருக்கும் அழைப்பு ஒரு தலைப்பட்சமானது. மாற்றுக் கட்சிகளுடனோ, தொழிற் சங்கங்களுடனோ முன் கூட்டியே கலந்து பேசாமல் எடுக்கப்பட்ட முடிவு அது. ஆகவே இந்த ஹர்த்தாலுக்கு நாம் செவிசாய்க்க வேண்டும் என்று அவர் எதிர்பார்க்க முடியாது.

சுதந்திரக்கட்சித் தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைவரான அலவி மௌலானா இவ்வாறு தெரிவித்தார்.

இதேவேளை —

முஸ்லிம் காங்கிரஸின் ஹர்த்தால் அழைப்புக்கு ஆதரவளிப்பது இல்லை என சுதந்திரக்கட்சியின் நாடாளுமன்றக் குழுவும் முடிவு செய்துள்ளது.

பொலன்னறுவ படுகொலைகள் தொடர்பாக மாற்று எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் பல்வேறு விடயங்கள் தொடர்பாக சிறிமா — அனுரா பண்டாரநாயக்கா கோஷ்டியினர் இடையே காரசாரமான விவாதங்கள் இடம் பெற்றன என்றும் கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஒ-த)

## வெளிநாடுகளில் ஒரு லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு

கொழும்பு, அக். 22

மத்திய கிழக்கு மற்றும் நாடுகளில் அடுத்த ஆண்டு முதல் ஒரு லட்சம் பேருக்குத் தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுக்கும் திட்டம் ஒன்று செயற்படுத்தப்படவுள்ளது.

இலங்கை வெளிநாட்டுத் தொழில் பணியகம், பதிவு செய்யப்பட்டுள்ள தொழில் ஏஜன்ஸிகளின் உதவியுடன் மேற்படி திட்டத்தை செயற்படுத்த முன்வந்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது. (ஒ-எ)


உ

## ★ திருமணத் திருமுகம் ★

நிகழும் மங்களகரமான ஆங்கிரச வருடம் ஐப்பசி மாதம் 7ஆம் நாள் (23-10-92) வெள்ளிக்கிழமை காலை 6-02 மணி முதல் 9-00 மணி வரையுள்ள சுப முகூர்த்த வேளையில்,

எமது ஏக புத்திரன் திருவளர் செல்வன் **நித்தியானந்தன்** (லொறி-ஆனந்தன்) அவர்களுக்கும்

எமது கனிஷ்ட புத்திரி திருவளர் செல்வி **ராகினி** அவர்களுக்கும்

நீர்வேலி-அருள்மிகு செல்லக்கதிர்காம சுவாமி ஆலய மண்டபத்தில் திருவருள் துணையால் இனிதே நடைபெறவிருக்கும் திருமண விழாவில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் குடும்ப சகிதம் வருகை தந்து, மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

(தனிப்பட்ட அழைப்பிதழ்கள் இல்லை)

இவ்வண்ணம்,
தங்கள் நல்வரவை நாடும்:

சி. கிருஷ்ணபிள்ளை தம்பதிகள்,
நீர்வேலி-புன்னாலைக் கட்டுவன் றோட்,
அச்செழு, நீர்வேலி.

சி. நடனசிவராசா தம்பதிகள்,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

(இருவீட்டார் அழைப்பு)

(5506)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இசைகள் நிறைந்ததும், தரத்தில் உயர்ந்ததுமான CASIO M. T 520 ஒன் எம்மிடம் விற்பனைக்கு உண்டு. உடன் தொடர்பு கொள்ளவும்: இல. 40A, B. S. போட்டோ, இராஜேந்திரா வீதி, குருநகர், [சி-3601]

அலுமினிய பிறேம் போட்ட கண்ணாடி சோகேஸ், 3 லாச்சி கொண்ட காசாளர் மேசை விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். மரத் தொழிற்சாலை, இல. 93, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். [5504]

### கடை விற்பனைக்கு

நல்லூரில் சகல வியாபாரமும் செய்வதற்கு ஏற்ற நல்ல சூழலில் அமைந்த புத்தம் புதிய தட்டைக் கூரை (Slab) உடைய கடை விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 123, செருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். [22954]

### சைக்கிள் விற்பனைக்கு

மாணவர் அளவு 18'' துவிச்சக்கர வண்டி Lumala விற்பனைக்கு உண்டு. மு.ப. 9-00 முதல் பி.ப 5-00 மணி வரை பார்வையிடலாம். க. முத்துக்குமாரசாமி, பாரதி பதிப்பகம் (A. B. Printers), 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [சி-3720]

### இறைச்சிக் கோழி

சிறப்பு விருந்துகளுக்கு மிக உகந்த புறொயிலர் முறைப்படி வளர்க்கப்பட்ட இறைச்சிச் சேவல்கள் விற்பனையாகின்றன. யாழ் வீதி, உரும்பராய்ச் சந்தி (அன்னை பூபதி கலையரங்கம் அருகில்) [22974]

### இலவச திருமண சேவை

32 வயது, விசாகம், ஏற்றுமதி, இறக்குமதி செய்யும் லொறி உரிமையாளருக்கு மணப்பெண் தேவை. சகல துறைகளிலும் மணமக்கள் உண்டு. தொடர்பு ஞாயிறு காலையில். து. விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. [22958]

31 வயது, சித்திரை 8, செவ்வாய் 4, பொற் தொழில் செய்யும் கடை உரிமையாளருக்கு ஏற்ற மணப்பெண் தேவை. தொடர்பு ஞாயிறு காலையில். து. விமலா, இலவச திருமண சேவை, யாழ் நாச்சிமார் கோவிலடி. [22959]

40 வயது, உத்தராடம், ICMA - II உடன் உதவிக் கணக்காளராக சவூதியில் வேலை செய்பவருக்கு மணமகள் தேவை ஞாயிறு தினங்களில் எமது சேவை உண்டு. து. விமலா, யாழ் நாச்சிமார் கோவிலடி. [22955]

### நினைவுக்கு ஒரு மரம்

இனிய நிகழ்வுகளையும் இனியவர்களையும் நினைவுகூரப் பயன்தரு மரம் நடுங்கள். 25 மில்லிக்கு வற் நீல சோப் அல்லது சவர்க்காரம் வெற்றுப் பக்கற் தந்து மரக்கன்று பெறுங்கள். மில்க்வைற் [சி-3604]

### தேவை

வெற்று லக்ஸ்பிறே பை கொள்வனவு செய்யப்படுகின்றது. நியூ லங்கா பாம், கே.கே.எஸ். வீதி, இணுவில். உடன் தொடர் கொள்ளவும். [5501]

### செயல்நூல் ஆண்டு - 11

க.பொ.த. (சா/த) பரீட்சையில் தமிழ் மொழியில் உயர் சிறப்புச் சித்தி பெற உறுதுணை புரியும் நூல். மூன்று பகுதி வினாக்களும் விடையும் கொண்டது ஆக்கம்: பண்டிதர் சு. வேலுப்பிள்ளை (சு. வே) வெளியீடு: ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை. [5385]

## பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், ஆக். 22

யாழ். பல்கலைக்கழக இரண்டாம் ஆண்டு மருத்துவ மாணவர் பரீட்சை முடிவுகள் வெளியாகி உள்ளன. இப் பரீட்சையில் இருபத்தியொரு மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். (த)

## விதவைகளுக்கு தொழில்வாய்ப்பு

உடுவில், ஆக். 22

விதவைகளுக்கு தொழில் வாய்ப்பு அளிக்கும் முயற்சியில் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

கட்டுடைப்பகுதியில் தெரிந்தெடுக்கப்பட்ட அகதிகளுக்கு அரிசியை இடித்து மாவாகப் பைகளில் அடைத்து விற்பனை செய்யும் தொழிலில் அவர்களை மேற்படி நிறுவனம் ஈடுபடுத்தியுள்ளது.

விதவைகளுக்கான உதவித் திட்டத்தின் கீழ், இதில் சேர்ந்துள்ள விதவைகளுக்கு ஊக்குவிப்பு பணம், நிவாரணப் பொருள்கள், உணவுப் பொருள்கள் ஆகியவற்றை அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் வழங்கி வருவதுடன் விதவைப்பெண்களின் பிள்ளைகள் படிப்பதற்கு வேண்டிய கல்வி உபகரணங்களையும் வழங்கி வருகின்றது. (த-152)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## வெளிவாரிக் கற்கைநெறிப் பதிவுகள் 1991/1992 கல்வியாண்டு

யாழ்ப்பாணம்/வெளிவாரிக் கற்கை நெறிகளான கலைமுதல் வர்த்தக முதல் வர்த்தகமாணி பகுதி 1, பொதுக்கலைமாணி பகுதி 1, சிறப்புக்கலைமாணி பகுதி 1 ஆகியவற்றிற்குப் பதிவு செய்த மாணவர்கள் தங்கள் பதிவுக்கான கடிதத்தை வெளிவாரிப் பகுதியில் 21-10-1992 முதல் பெற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் துணைவேந்தர் தலைமையில் பின்வரும் பிரவேச, வரவேற்பு நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன:

அமர்வு I — 24-10-1992 (சனிக்கிழமை) பி. ப. 2 மணி புதிய மாணவர்கள் (கலை/வர்த்தகம்)

அமர்வு II — 24-10-1992 (சனிக்கிழமை) பி. ப. 3 மணி இரண்டாம் வருட மாணவர்கள் (கலை/வர்த்தகம்)

பதிவுபெற்ற அனைத்து மாணவர்களும் மேற்படி நிகழ்வில் கலந்து கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

-பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம் [சி-3606]

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 13 — 04 — 1942

மறைவு: 02 — 11 — 1991

திருமதி

### நல்லம்மா சின்னத்தம்பி

திதி: 22 — 10 — 1992

ஆண்டொன்று சென்றாலும் ஆறாது எம் துயரம் நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்தாலும், உங்கள் நினைவுகளை நனவாக்குவோம். அன்பின் சிகரமே! அருமை அம்மா! எங்களை ஆறாத்துயரில் ஆழ்த்தி, மீளாத் துயில் கொண்டு விட்டாய்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்;

அன்புக் கணவன், மக்கள், சகோதரர்கள், மைத்துனிமார், மருமக்கள்.

அளவெட்டி,
பனை. [22960]

எழுதுமட்டுவாள்

## ஸ்ரீ வரத மீனாட்சி அம்மன் தேவஸ்தானத்தில்

## ★ கம்பன் கண்ட ஹனுமான் ★

யாழ். கம்பன் கழக அமைப்பாளர்
திரு. இ. ஜெயராஜ் அவர்களின்
பதிவுச் சொற்பொழிவு நாளை (23-10-1992) பகல்

இந்த ஆலயத்தின் மண்டலாபிஷேக 45 நாள் பூரண நிறைவையிட்டு நடைபெறும்.

### நவோத்திரகலச சங்காபிஷேகம்

அளவெட்டி ஸ்ரீ நாக வரத நாராயணன் தேவஸ்தான பிரதம குருக்கள் பிரம்மஸ்ரீ உருத்திரேஸ்வரர் அவர்கள்

சங்காபிஷேக கிரிகை மந்திரங்களை தமிழில் ஓதி விழாவை நடத்துவார்.

1. அளவையூர் அருட்கவி
   திரு. சி. விநாசித்தம்பி அவர்கள் (ஆசிரியர்)
2. ஆத்மஜோதி ஆசிரியர்
   திரு. நா. முத்தையா அவர்கள்
3. தெல்லிப்பளை துர்க்கா துரந்தரி
   செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

பிரதம அதிதிகளாக விழாவில் கலந்து கொள்வார்கள் என்பதை அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.

டாக்டர் தா. கணபதிப்பிள்ளை,
(ஆலய தர்மகர்த்தா).

[22968]

வேம்படி மகளிர் கல்லூரி

## முறைசாராக் கல்வி பயிற்சி நெறி - 1992

19 - 10 - 1992 உதயனில் வெளியான மேற்படி விளம்பரத்திற்கமைய ஹோட்டல் முகாமைத்துவம், பெண்களுக்குரிய ஆடை அமைத்தல் ஆகிய இரண்டு பயிற்சி நெறிகளையும் நடத்துவதற்கு கால அவகாசம் போதாமையால், அவற்றுக்குப் பதிலாக பின்வரும் குறுகிய கால பயிற்சிகள் நடத்தப்படவுள்ளன:

★ ஆண்களுக்கான சேட், காற்சட்டை வெட்டுதல், தைத்தல்.
★ கோலம் போடுதலும், மாலை கட்டுதலும்.
★ காகிதத்தில் பொம்மை தயாரித்தல்.
★ சாறி பின்னுவதும், பாடசாலைச் சீருடையும்.
★ சிகை அலங்காரம்.
★ உள்ளூர் மூலப் பொருள்களில் உணவு தயாரித்தல்.

இக் குறுகிய கால பயிற்சி நெறிகளை டிசம்பர் 31 ஆம் திகதிக்குள் நடத்தி முடிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பாடசாலை விட்டு விலகியவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் அதிபரால் கோரப்படுகின்றன.

அதிபர்,
வேம்படி மகளிர் கல்லூரி.

[சி-3605]

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 25 — 06 — 1931

மறைவு: 19 — 10 — 1987

### அமரர் சுப்பையா நவரத்தினம்

(பாப்பா)

(ஓய்வு பெற்ற கிறாப்பர், நீர்ப்பாசன இலாகா-கல்கமுவ)

திதி: 22 — 10 — 1992

அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி, மகன்,
உற்றார், உறவினர்கள்,
நண்பர்கள்.

165, இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி. [22970]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### இரண்டில் எதனை அரசு செய்யும்?

1985 ஆம் ஆண்டிலிருந்து பார்க்கும்போது, இந்த வருடத்திலேயே மிகக் கூடுதலான அடிப்படை உரிமை மீறல் வழக்குகள் தொடரப்பட்டிருக்கின்றன. 26 ஆக இருந்த அடிப்படை உரிமை மீறல் வழக்குகளின் எண்ணிக்கை எட்டு வருடங்களில் 801 ஆக உயர்ந்துள்ளது!

நாட்டில் அடிப்படை உரிமை மீறல்கள் அளவு மட்டம் இல்லாமல் அதிகரித்துக் கொண்டு வருகின்றன என்பதே இதன் அர்த்தமாகும். அரசாங்கம் தனது பிரசைகளின் அடிப்படை உரிமைகளை கண்ட மாதிரியும், தான் நினைத்தவாறும் மீறி வருவது தெரிந்த ஒன்றே. அடிப்படை உரிமை மீறல்களுக்கு ஆளான சகலரும் வழக்குத் தொடர்வதென்றால் எண்ணிக்கை இன்னும் பல மடங்கு உயரும் என்பதில் சந்தேகமில்லை.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், அவசரகாலச் சட்டம் ஆகிய கொடூரமான, நிட்டூரமான சட்டங்களின் துணை கொண்டு மக்களின் அடிப்படை உரிமைகளை அரசாங்க உயர் அதிகாரிகள் மீறி வருவது இப்போது சர்வ சாதாரணமாகி விட்டது. அவற்றையும் எதிர்த்துப் பாதிக்கப்பட்டவர்கள் சகலரும் வழக்குத் தொடர்வதாக இருப்பின் வழக்குகளின் எண்ணிக்கை ஐந்து தானங்களையும் தாண்டி விடும்!

அனேகமான வழக்குகள் அரசுக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்குகளாகவே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இத்தனை பெரும் எண்ணிக்கையானோர் அடிப்படை உரிமை மீறப்பட்டதாக வழக்குத் தொடுத்தால் அவர்களுக்கு நீதிமன்றம் உரிய நிவாரணத்தை வழங்க முடியுமா என்ற கேள்வியும் எழுகிறது.

ஏனெனில் ஒருவர் தமது அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டதாக வழக்குத் தொடருமிடத்து, நீதிமன்றம் அந்த மனுவை விசாரித்து இரண்டு மாதங்களுக்குள் தீர்ப்பு வழங்கிவிட வேண்டும் என்று அரசமைப்புச் சட்டத்தில் பணிக்கப்பட்டுள்ளது.

அடிப்படை உரிமை மீறல் கோப்பிலப்பட்ட அல்லது ஆற்றுப்படுத்துகை செய்யப்பட்ட இரண்டு மாதங்களுக்குள்ளாக அதனை விசாரணை செய்து முற்றாக முடிவு செய்தல்வேண்டும் என்று அரசமைப்புச் சட்டத்தின் 125 ஆவது பந்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்கான நியாயாதிக்கம் உயர்நீதி மன்றத்துக்கே வழங்கப்பட்டுள்ளது. அதனை விடவும் ஆறு துறைகளில் உயர்நீதி மன்றத்துக்கு நியாயாதிக்கம் உண்டு

எனவே அடிப்படை உரிமை மீறல்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது இரண்டு மாதங்களுக்குள் விசாரணையை முடித்துத் தீர்ப்பு வழங்குவது கஷ்டமாக இருக்கும். ஆகையால் உயர்நீதி மன்ற நீதியரசர்களின் எண்ணிக்கையையும் பதினொன்றிலிருந்து அதிகரிக்க வேண்டிய தேவை வரலாம்.

அதற்குப் பதிலாக, அரசு அடிப்படை மீறல்களை குறைத்துக் கொள்வதே நல்லது.

ஆனால் தொடர்ந்து ஆட்சியில் இருக்க வேண்டும் என்ற ஆசையும், அடக்குமுறைச் செயற்பாடுகளும் இருக்கும் வரை, மக்களின் அடிப்படை உரிமைகளை அரசினரும் அதிகாரிகளும் மீறிக்கொண்டிருப்பர் அது நிச்சயம்.

# மாதகல் படைமுகாம் அருகில் நெற்பயிர்கள் அழியும் ஆபத்து

### கட்டாக்காலிகளை பிடிக்க உதவுமாறு செஞ்சிலுவையிடம் விவசாயிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், அக். 22

மாதகலில் படையினர் நிலை கொண்டிருக்கும் பகுதிக்கு அண்டிய இடங்களில் விவசாய மக்கள் பெரும் இடர்களுக்கு மத்தியிலும் நெற்செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.

பனிப்புலம் கிராமிய அபிவிருத்திக் குழுவின் எல்லைக் குட்பட்ட பகுதியில் மட்டும் 600 ஹெக்டர் பரப்பளவான விளை நிலங்களில் பயிர்ச் செய்கை நடைபெற்றுள்ளது.

இந்தப் பகுதியில் 80 சதவீத மக்காரர்கள் விதைப்பை முடித்து விட்டனர். மிகுதியானோரும் நாற்றிட்டு நடுகை செய்யக் காத்திருக்கின்றனர்.

இந்தக் காணிகள், மாதகலில் நிலை கொண்டிருக்கும் படையினரின் முகாமுக்கு தென்புறமாக அமைந்துள்ளன.

மேற்படி பகுதி வயல்களில் தற்பொழுது நெல் முளை அரும்பத் தொடங்கியுள்ளது. இந்த நிலையில் அந்தப் பகுதிகளில் நூற்றுக்கணக்கான கட்டாக்காலி மாடுகள் அங்குமிங்கும் திரிந்து மேய்ந்து வருகின்றன.

இந்த மாடுகள் மாதகல் பகுதி மக்கள் அதிகளவாகச் சென்ற சமயம், அவிழ்த்து விடப்பட்டவை ஆகும்.

இவை தொடர்ந்தும் இப்படியே விடப்பட்டால், அப்பகுதி மக்களால் பல லட்ச ரூபா செலவில் பயிரிடப்பட்ட நெல் வயல்கள் அழிக்கப்பட்டுவிடும் ஆபத்து நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் அப்பகுதியைச் சேர்ந்த விவசாய மக்கள் செஞ்சிலுவைச் சங்க சர்வதேச குழுவின் உதவியை நாடியுள்ளனர்.

அப்பகுதிகளில் திரியும் மாடுகளை, குறிப்பிட்ட ஒரு நாளில், அவற்றின் சொந்தக்காரர்கள் தென்புறம் நோக்கி துரத்தி வந்து பிடிப்பதற்கு, ஒத்தாசை புரியுமாறு செ.ச. சர்வதேசக் குழுவிடம் மகஜர் மூலம் கேட்கப்பட்டுள்ளது.

படையினரின் தாக்குதல் அடிக்கடி அப்பகுதிகளில் இடம்பெறுவதால், சொந்தக்காரர்கள் மாடுகளைப் பிடித்து வருவதற்கு செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவி தேவைப்படுவதாக அந்த மகஜரில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ஒ)

## தனி முஸ்லிம் இராணுவப் பிரிவால் எதையும் சாதித்துவிட முடியாது

### முஸ்லிம் பிரமுகர் கருத்து

முஸ்லிம்களுக்கென ஒருதனியான இராணுவப் பிரிவை வைத்து எதையும் சாதிக்க முடியாது. தேசிய ரீதியிலேயே எதுவும் அமைய வேண்டும்.

ஸ்ரீலங்கா மக்கள் காங்கிரஸ் தலைவர் அல்ஹாஜ் ஏ.எச்.டி. அமீன் இவ்வாறு தெரிவித்தார்.

சிலர் ஓர் இனத்துக்கென தனியான படை அமைக்க வேண்டும் என அரசை வற்புறுத்துகின்றனர். அதனால் அழிவுகள் அதிகரிக்கும், அமைதி சீர் குலையும்.

எமது அமைப்பு எப்போதும் இனவாதக் கொள்கைகளுக்கும், கட்சிகளுக்கும் எதிரானது. எல்லா மக்களையும் நம் தேசமக்களாகப் பாகுபாடின்றி அணைத்துச் செல்வதே எமது கொள்கையாகும்.

தனிப்பட்டவர்களின் கைகளில் ஆயுதங்களை வழங்குவதை எமது கட்சி முழுமையாக எதிர்க்கிறது. இது இனக்குரோதங்களையும் தனிப்பட்டவர்களிடையே பகைமையையும் வளர்க்கும்.

எனவே எந்த இனத்தைச் சேர்ந்த இளைஞர்களாக இருந்தாலும் அவர்களைப் பாதுகாப்புப் படையில் சேர்த்துப் பயிற்சி அளித்த பின்னர் தத்தமது கிராமங்களைப் பாதுகாக்க அனுப்பி வைக்கலாம்— என்றும் அல்ஹாஜ் அமீன் தெரிவித்துள்ளார்.

### எல்லைக்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பினார். அப்போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரதமர் தமது பதிலில் மேலும் கூறியதாவது:-

நாம் எல்லா மக்களுக்கும் பாதுகாப்பளிக்கும் நோக்குடன் செயற்படுகிறோம். எல்லைக் கிராமங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. ஒரே இடத்தில் நிலை கொண்டிருக்கச் செய்யுமளவுக்குப் போதிய பாதுகாப்புப் படையினர் எம்மிடம் இல்லை.

புலிகளின் தாக்குதல்களிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கு முஸ்லிம் கிராமவாசிகளுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. இக் கிராமங்களின் பாதுகாப்புக்கு பொலிஸாரும் இராணுவத்தினரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

எனினும், பொலன்னறுவ சம்பவத்தின் பின்னர் பாதுகாப்பு நடவடிக்கைக்குப் புதிய திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன— என்று கூறினார்.

எனினும் புதிய திட்டங்கள் பற்றிய விபரம் எதையும் பிரதமர் தெரிவிக்கவில்லை. [ஒ-10]

### காஷ்மீர் எல்லைப் பகுதிக்கு

## 10 ஆயிரம் இந்தியப்படை கமாண்டர்கள் விரைவு

### பாதுகாப்பு உஷார் நிலையில்

லண்டன், அக் 22

இந்திய இராணுவத்தின் 10 ஆயிரம் கமாண்டர்கள் காஷ்மீர் பள்ளத்தாக்கிலுள்ள பாகிஸ்தான் எல்லைப் பகுதிக்கு விரைந்துள்ளதாக ஏஜென்சிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஏற்கனவே அப்பகுதியில் குவிக்கப்பட்டுள்ள இந்தியத் துருப்புகளை வலுப்படுத்த இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் சனிக்கிழமை காஷ்மீரின் பாகிஸ்தான் பகுதியிலுள்ள சில அரசியல் கட்சிகள், இந்தியப் பகுதி காஷ்மீருக்குள் ஊடுருவப் போவதாக அறிவித்திருப்பதை அடுத்து இந்திய அரசு எல்லைப் பகுதியில் பாதுகாப்பைப் பலப்படுத்தியுள்ளது.

காஷ்மீரைத் தனிநாடாக்கப் போராடும் தீவிரவாதிகளுக்கு ஆதரவு தெரிவித்து பாகிஸ்தான் பகுதி காஷ்மீரிலுள்ள அரசியல் கட்சிகள் சில இந்த ஊடுருவலை நடத்தத் திட்டமிட்டுள்ளன.

இதேசமயம்—

சட்டவிரோதமாக எல்லையைக் கடந்து இந்தியாவுக்குள் நுழையும் எவரையும் கண்டவுடன் சுடுமாறு இராணுவத்துக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக இந்திய அரசு அறிவித்துள்ளது. (ஒ-10)

### மாதாந்த உதவிப் பணம்

வலிகாமம் தெற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அடங்கும் தாவடி, சங்குவேலி, புதுமடம் ஆகிய உப அஞ்சல் அலுவலகங்கள் தவிர்ந்த ஏனைய உப அஞ்சல் அலுவலகங்களில் மாதாந்த பொதுசன உதவிப் பணம் பெறுவோர், அவ்வப்பகுதி அஞ்சல் அலுவலகங்களில் 1992 ஆடி மாதத்திற்கான தமது பணத்தை பெற்றுக் கொள்ளுமாறு வலி தெற்கு பிரிவுச் செயலர் அறிவிக்கின்றார். (ஒ)

### பாட நூல் வெளியீட்டு விழா

ஆசிரியர் திரு. ஐ. குருநாத பிள்ளையின் ஆங்கிலப் பாட நூல் வெளியீட்டு விழா இன்று மாலை 4 மணிக்கு கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் நடைபெறும். (ஓ-17)

### நூலக வார புத்தகக் காட்சி

அரியாலை, அக். 22

யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தின் நூலக வார புத்தகக்காட்சி நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு அதிபர் மு. இராமலிங்கம் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட கல்விப்பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் கலந்து கொள்வார். (ஒ-17)

### தீபாவளி வியாபாரம்!

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு யாழ். நகரில் வியாபாரம் ஓரளவு சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளது.

கஸ்தூரியார் வீதி, புதிய சந்தைப்பகுதி மற்றும் பெரிய கடைப்பகுதி ஆகிய இடங்களில் அங்காடி வியாபாரிகள் உடுபுடவைகளை விற்பனை செய்கின்றனர். (ஒ-17)

# மருந்து வகைகளைத் தருவிப்பதற்கு உரியகாலத்தில் தகுந்த நடவடிக்கை

### சுகாதாரப் பணிப்பாளர் தரும் விளக்கம்

யாழ்ப்பாணம், அக். 22

யாழ். பிராந்திய சுகாதாரப் பணிப்பாளரும், யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரும் மருந்து வகைகளைத் தருவிப்பதற்கு உரிய காலங்களில் தகுந்த நடவடிக்கைகள் எடுத்துள்ளார்கள்.

தேவையான மருந்து வகைகளின் வருடாந்த மதிப்பீடுகள் கொழும்பு மருந்துக் களஞ்சியத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன.

"மருந்துத் தட்டுப்பாடு குறித்து சரியான தகவல் இல்லையாம். கொழும்பு சென்று திரும்பிய அதிகாரி கவலை" என்ற தலைப்பில் 11 - 10 - 1992 ஆம் திகதி உதயனில் வெளிவந்த செய்திக்கு அனுப்பிய விளக்கத்தில் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி பெ. இரத்தினசபாபதி இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

அவரது விளக்கத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கால் ஆண்டிற்குத் தேவையான மருந்துகள் இங்கு கிடைக்கும் பொழுது குறைபாடுகளை உடனுக்குடன் நிவர்த்தி செய்யும்படி கோரப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக கொழும்பில் நடக்கும் கலந்துரையாடல்களில் மருந்துப் பற்றாக்குறை பற்றி எடுத்துக் கூறப்பட்டது.

மருந்துகளை இங்கே அனுப்பி வைக்கும் நிமித்தம் கொழும்பில் வேண்டிய ஒழுங்குகள் செய்வதற்காக யாழ். பிராந்திய சுகாதார சேவைத் திணைக்களத்தில் இருந்து ஒருவரும், யாழ். போதனா வைத்தியசாலையிலிருந்து ஒருவரும் கடமையில் தொடர்ச்சியாக ஈடுபட்டுள்ளார்கள்.

மருந்துத் தட்டுப்பாட்டிற்கு முக்கிய காரணம் கொழும்பு மருந்துக் களஞ்சியத்தில் சில மருந்துகளுக்கு தட்டுப்பாடு இருப்பதும், கட்டுப்பாட்டுத் தலைமையகத்தால் சில மருந்துகளுக்கு அனுமதி மறுத்தலும், வேறு சில மருந்துகளைக் குறைத்து அனுமதித்தலும் ஆகும்.

மருந்துகளுக்கும், வைத்திய உபகரணங்களுக்கும் இருக்கும் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்கு அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகோரிய பொழுது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், சிறுவர் பாதுகாப்பு நிதியம், பிரெஞ்சு மருத்துவக்குழு, தமிழர் அகதிகள் புனர்வாழ்வுக் குழு, ஒக்ஸ்பாம் ஆகிய நிறுவனங்கள் உதவியுள்ளன— என்று உள்ளது.

**ஆசிரியர் குறிப்பு:**

யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் விசேட கூட்டம் கடந்தமாதம் 28ஆம் திகதி நடைபெற்ற போது தொண்டர் நிறுவனம் ஒன்றின் தலைவர் தாம் கொழும்பு சென்று திரும்பிய பின்னர் தெரிவித்த தகவல்களை அடிப்படையாக வைத்தே மேற்படி செய்தியை வெளியிட்டோம்.

கொழும்பில் சுகாதார அமைச்சைச் சேர்ந்த மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் விநியோகத்திற்குப் பொறுப்பான இயக்குநர் டாக்டர் அஜித் மெண்டிஸ் என்பவரைச் சந்தித்த போதே அவர் யாழ். மருந்து நிலைமையைச் சரியாகப் பிரதிபலிக்கும் தகவல்கள் தமக்குக் கிடைப்

[6 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இம்மாதத்தில் நடக்கும் முக்கிய பொதுப்பரீட்சைகள்

யாழ்ப்பாணம், அக். 22

இலங்கைக் கல்வி நிர்வாக சேவைக்கு ஆட்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சை இம் மாதம் 31 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இம்மாதத்தில் மற்றும் சில பொதுப் பரீட்சைகள் நடைபெறவுள்ளன. அவற்றின் விவரம் வருமாறு:-

★ இலங்கை கல்வி நிர்வாகச் சேவை, கணக்காளர் சேவை, மற்றும் இறைவரியொத்த சேவைகள் —

அக்டோபர் 31 ஆம் திகதி தொடக்கம் நவம்பர் 06 ஆம் திகதிவரை.

★ ஒன்றுபடுத்திய சுங்கச் சேவையில் சுங்கச் சோதனைகாரரை ஆட்சேர்ப்பதற்கான பரீட்சை —

அக்டோபர் 31 ஆம் திகதி

★ அஞ்சலதிபர், சைகையாளர்களுக்கான பொறுப்பாளர் பரீட்சை —

அக்டோபர் 31 ஆம் திகதி

★ கல்வி டிப்ளோமா, முழு நேரப் பயிற்சி நெறிக்குத் தெரிவு செய்வதற்கான பரீட்சை —

நவம்பர் 14 ஆம் திகதி;

★ சட்டக்கல்லூரி அனுமதிப் பரீட்சை —

நவம்பர் 08 ஆம் திகதி

(அ)

## கண்காட்சியும் கலைவிழாவும்

தென்மராட்சி, அக். 22

சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலய ஆரம்ப பிரிவு மாணவிகளின் கண்காட்சியும் கலைவிழாவும் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு தென்மராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ சிவகுருநாதனால் ஆரம்பித்து வைக்கப்படும்.

கண்காட்சி இம் மாதம் 24 ஆம், 26 ஆம் திகதிகளில் நடைபெறும்.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி பிரதேச செயலாளர் பு. சுந்தரம்பிள்ளை, சாவகச்சேரி நகரசபை விசேட ஆணையாளர் த. நவரத்தினராசா ஆகியோர் கலந்து கொள்கின்றனர். (இ-117)

## ஆலய உற்சவங்கள்

தென்மராட்சி, அக். 22

சாவகச்சேரி, சங்கத்தானை, இத்தியடி வீரகத்தி விநாயகர் ஆலய கூட்டுப் பிரார்த்தனை சபையின் பதினான்காவது ஆண்டு நிறைவு விழா நாளை வெள்ளிக்கிழமை நடைபெறும்.

இவ்விழாவையொட்டி ''பெண்மையாற்றலில் பெரிதும் சிறந்தவள் கண்ணகியா? சீதையா? பாஞ்சாலியா?'' என்ற தலைப்பிலான பட்டிமன்றம் இடம்பெறும். இப் பட்டிமன்றுக்கு கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் நடுவராகப் பணியாற்றுவார். (அ-117)

★ ★ ★

எழுதுமட்டுவாழ் ஸ்ரீ வரத மீனாட்சி அம்பாள் ஆலயமண்டலாபிஷேக பூர்த்தி விழாவும் சங்காபிஷேகமும் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறும். (அ-117)

★ ★ ★

கேதார கௌரி விரதத்தை முன்னிட்டு நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் சிவன் கோவிலில் கௌரி அம்பாளுக்கு விசேட பூசை காலையிலும் மாலையிலும் நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 25 ஆம் திகதி தீபாவளி தினத்தன்று முற்பகல் 10 30 மணிக்கு விசேட அபிடேகமும், உற்சவமும் தொடர்ந்து கௌரி விரதம் அனுஷ்டிப்போருக்கு கௌரி காப்பு வழங்கலும் வைபவமும் இடம்பெறும். (அ-5)

★ ★ ★

நாளை ஐப்பசி முதல் வெள்ளிக்கிழமையாகும். அதனையொட்டி குடாநாட்டிலுள்ள முருகன் ஆலயங்களில் விசேட அபிசேகங்களும், விசேட பூசைகளும் நடைபெறும். பல ஆலயங்களில் முருகப் பெருமான் வீதி உலா வருவதும் உண்டு.

## அக்டோபர் ஓய்வூதியம்

அக்டோபர் மாதத்துக்குரிய ஓய்வூதியத்தை இன்று முதல் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் இதனைத் தெரிவித்தார்.

அக்டோபர் மாதத்துக்குரிய ஓய்வூதிய வவுச்சர்கள் ஏற்கனவே யாழ் செயலகத்துக்கு வந்து சேர்ந்தபோதிலும் நிதி நெருக்கடி காரணமாக ஓய்வூதியம் வழங்கப்படாமல் இருந்தது. (இ-3)

## விடுதலைப்...

(1 ஆம் பக்கம் தொடர்ச்சி)

பொலன்னறுவையில் அப்பாவி முஸ்லிம் பொது மக்களை விடுதலைப் புலிகளே கொன்றிருக்கிறார்கள்: அந்தப் படுகொலைகளைச் செய்வதற்கு ''மொஸாட்'' அமைப்பு நிதி உதவியும் ஆயுத உதவியும் அளித்திருக்கிறது. விடுதலைப் புலிகளுக்கு ''மொஸாட்'' அமைப்பு நிதி உதவியும், ஆயுத உதவியும் வழங்கி வருவதற்கான ஆதாரங்கள் உண்டு.

புலிகள் சாதாரண முஸ்லிம் மக்களைக் கொலை செய்யும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர்களுக்கு இஸ்ரவேலியரிடமிருந்து ஆயுதங்களும் பணமும் கிடைக்கின்றன— என்றார்.

விடுதலைப் புலிகளுக்கும் ''மொஸாட்'' அமைப்புக்கும் இடையே ஏதாவது தொடர்பு இருப்பதற்கான ஆதாரம் எதுவுமே இல்லை— என்று பிரதமர் மறுத்துரைத்தார். (அ-எ-10)

## மருந்து...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பதிலை என்று கூறியதாகச் தொண்டர் நிறுவனத் தூது ... இல் வேலை தெரிவித்திருந்தார்.

## இரு கோட்டங்களில்
# சதுரங்கப் போட்டி இன்று ஆரம்பம்

''உதயன்'' நிறுவனத்தின் ஆதரவுடன் யாழ். கல்வித் திணைக்களம் நடத்தும் சதுரங்கச் சுற்றுப் போட்டியில் மருதனார்மடம், பண்டத்தரிப்புக் கோட்ட மாணவர்களுக்கான முதற் கட்ட ஆட்டங்கள் இன்று ஆரம்பமாகின்றன.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் இன்றும் நாளையும் காலை 8.30 மணி முதல் இப் போட்டிகள் நடைபெறும்.

யாழ்ப்பாணம் கோட்ட மாணவர்களுக்கான சதுரங்கப் போட்டிகள் கடந்த வாரம் யாழ். இந்துக் கல்லூரி மண்டபத்தில நடைபெற்றதும் —

அப் போட்டிகளில் நூற்றுக்கு மேற்பட்ட மாணவ, மாணவிகள் பங்குபற்றியதும் குறிப்பிடத்தக்கது.

19, 15 வயதுப் பிரிவுப் மாணவர்களிடையே இச்சுற்றுப் போட்டி நடத்தப்பட்டு வருகிறது.

ஆசிரியர்களுக்கான சதுரங்கப் போட்டிகள் நடத்தப்படும் திகதிகள் குறித்து பின்னர் அறிவிக்கப்படும் என போட்டிகளுக்கான ஏற்பாடுகளைக் கவனித்துவரும் உடற் கல்விக்குப் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. த. அருணகிரிராஜா தெரிவித்தார். (உ)

# இன்றைய உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், அக். 22

யாழ். கல்வித் திணைக்களம் யாழ் மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் நான்கு ஆட்டங்கள் இன்று மாலை நடைபெறவிருக்கின்றன.

### யாழ். இந்து

யாழ் இந்து மைதானத்தில் 17 வயதுப் பிரிவில் நடைபெறும் ஆட்டங்களில் —

அருணோதயாக் கல்லூரியை எதிர்த்து மானிப்பாய் இந்துவும், சென். ஜோசப் ம. வியை எதிர்த்து புங்குடுதீவு ம. வியும் மோதும்.

### சென். ஜோன்ஸில்

சென். ஜோன்ஸ் மைதானத்தில் நடைபெறும் 19 வயதுப் பிரிவு ஆட்டத்தில் —

மானிப்பாய் இந்துவை எதிர்த்து புங்குடுதீவு மகாவியும், கனகரத்தினம் ம. ம. வியை எதிர்த்து வட்டு. இந்துவும் மோதும். (உ)

★ ★ ★

நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழகம் கழக மைதானத்தில் — 7 பேர் கொண்ட அணிகளுக்கிடையில் — நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்கள் வருமாறு:-

★ சென். பீற்றர்ஸ் வி. க அணி எதிர் திருநகர் பாரதி வி. க. அணி

★ சென். மேரிஸ் வி. க. அணி எதிர் சென். றோசா வி. க. அணி (உ)

## மட்டக்களப்பு...

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

பாக்கியன் (சந்திவெளி), சின்னத்தம்பி ராஜேந்திரன் (சந்திவெளி), கணபதிப்பிள்ளை உதயகுமார் (சந்திவெளி), சாமித்தம்பி தேவராஜா (4 ஆம் பிரிவு, ஐயன்கேணி), வைரமுத்து சுப்பிரமணியம் (களுவன்கேணி), மார்க்கண்டு கிருஷ்ணபிள்ளை (களுவன்கேணி), செல்லத்தம்பி முருகுப்பிள்ளை (களுவன்கேணி)

அருளம்பலம் தியாகலிங்கம் (நாவற்காடு), மாணிக்கம் ரவிச்சந்திரன் (நாவற்காடு), அந்தோனிமுத்து ராஜேந்திரன் (நாவற்காடு), அழகப்போடி குலசேகரம் (ஆரையம்பதி).

இவர்கள் அனைவரும் தமிழ்க் கிராமங்களில் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பு, தேடுதல்களின்போது பிடித்துச் செல்லப்பட்டவர்கள் ஆவர். (அ-10)

## ஓய்வூதியர் விவரம் திரட்டப்படுகிறது

யாழ்ப்பாணம், அக். 22

ஓய்வூதியக் கொடுப்பனவுகள் பிரதேச சபைகளுக்கு மாற்றப்படவிருப்பதை அடுத்து ஓய்வூதியர்களின் விவரங்களை கிராம சேவையாளர்கள் திரட்டத் தொடங்கியுள்ளனர்.

இதேவேளை —

ஓய்வூதியர்களின் விவரங்களை அனுப்புவதற்கான படிவங்கள் கைவசம் இருப்பதாகவும் —

சம்பந்தப்பட்டவர்கள் தமது பகுதி பிரதேச ஓய்வூதியர்கள் சங்கச் செயலாளரிடம் படிவங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் வ ஓ. ச. சம்மேளனச் செயலாளர் திரு. பி. எஸ். திருச்செல்வம் தெரிவித்துள்ளார். (ஒ)

# மரண அறிவித்தல்கள்

## சுப்பிரமணியம் அகிலேஸ்வரன் (நீசன்)

புங்குடுதீவு 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் சுவிற்சர்லாந்தை வதிப்பிடமாகக் கொண்டவருமாகிய திரு. சுப்பிரமணியம் அகிலேஸ்வரன் 19-10-1992இல் சுவிஸில் காலமாகிவிட்டார்.

இவர் சுப்பிரமணியம் பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும், லலிதாதேவியின் அன்புக் கணவரும், கருணாதேவி, முத்துராணி, சோமசுந்தரம் (சுவிஸ்), சந்திரகலா ஆகியோரின் அன்புச் சகோதரனும், கனகலிங்கம் (பிரபல வர்த்தகர், கொழும்பு), பாலேந்திரன், தனலெட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவரார்.

அன்னாரின் துக்க அனுஷ்டிப்பு கீழ்க்காணும் முகவரியில் நடைபெறுகிறது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. சுப்பிரமணியம்
(தந்தை)

18/4, B.A. தம்பி ஒழுங்கை,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(22978)

## சின்னத்தம்பி யோசேப் தம்பித்துரை
(புகையிர நிலைய வீதி, சாவகச்சேரி)

திரு. சின்னத்தம்பி யோசேப் தம்பித்துரை 21-10-92 புதன்கிழமை அன்று காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற திருமதி லிலியன் ஞானசௌந்தரியின் அன்புக் கணவரும், சறோஜினி, விஜயராஜ் (ஆஸ்திரேலியா), யோகினி, ஞானகலோஜினி (சிங்கப்பூர்), வசந்தினி (லண்டன்), அற்புதராஜ் (ஆஸ்திரேலியா), ஜீவராஜ் ஆகியோரின் அன்புத் தந்தையும், சோமநாதன், சாந்தா (ஆஸ்திரேலியா), இரத்தினராஜா, கலாநிதி வில்சன் (சிங்கப்பூர்), ஜனேந்திரன் (லண்டன்), தேவராணி (ஆஸ்திரேலியா), ஜெயா ஆகியோரின் அன்பு மாமனாரும், ரூபன் சோமநாதன் (லண்டன்), சோமினா (ஆஸ்திரேலியா), தேவினா (கனடா), மஞ்சுளா (டென்மார்க்), லக்சுமி (கனடா), ஜெயந்தன் (லண்டன்), நிறூபா, பிரீந்தா, பிரபாகரன், விஜயகரன் (ஆஸ்திரேலியா), ஜெயாகரன் (லண்டன்), வினோதினி (செக்கோஸ்லோவேகியா), இராஜகரன் (லண்டன்), டானியல் தேவகரன் (லண்டன்), நிரோதினி, தர்ஷினி, பிரகாஷ் (சிங்கப்பூர்), சிராவன், மேரா (லண்டன்), பிரியா (ஆஸ்திரேலியா), பிரதீபன், காண்டீபன், ஜெனி, நிம்மா, ஜீவராஜ் குமார், குணசீலன், யுகன் ஆகியோரின் அன்புப் பேரனாரும், சஞ்ஜீவன், நவீனன் (ஆஸ்திரேலியா), றுக்ஷன் (கனடா), மறூனா (டென்மார்க்), லக்ஷ்மன் (கனடா) ஆகியோரின் பூட்டனும் காலஞ்சென்ற ஞானம்மா, சபாரத்தினம், குணரத்தினம், பூரணம்மா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 21-10-92 புதன்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெற்றது என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றேன்.

தகவல்:
த இரத்தினராசா
(மருமகன்)

ஜெப அஹம்,
இல. 1 ஜெய லேன்,
சாவகச்சேரி.

(5508)

தீபாவளியை முன்னிட்டு

# சீமாட்டி

## ★ மலிவு விற்பனை ★

★ சைனா சீத்தை
★ தாறிகா வோயில் சாறி வகைகள்
★ உறையூர் சேலைகள் (சுத்தமான பருத்தி)
★ புதிய டிசைன் சாறி வகைகள்
★ பேபி சூட்டுகள்
★ ஒறிஜினல் கிப்ஸ் மார்க் சாரங்கள்
★ பெனியன்கள், ஏனைய
★ கிப்ஸ் தயாரிப்புச் சார வகைகள்
★ சேட் வகைகள் (டாம் டாம், ஜோன் கப்பர், மார்ட்டின்)

மற்றும் அனைத்து தீபாவளித் தேவைகளுக்கும் இன்றே நாடுங்கள்!

சீமாட்டி ஜவுளி சமுத்திரம்,
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-3709)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361/1, இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 22-10-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org